BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
ISO 9001:2015 Certified Institution

# பத்தாம் வகுப்பு தமிழ்

## தமிழ்த்துகள் அலகுத்தேர்வு 3 இயல் 1

மதிப்பெண்கள் 25 | நேரம் 45 நிமிடங்கள்

**I பலவுள் தெரிக.** 2X1=2

1. எது வினையாலணையும் பெயர்?

அ படித்தவர் ஆ பாடுதல் இ படித்தல் ஈ பாடு

2. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிப்பது –

அ.குலைப்பெயர் வகை ஆ.மணிப்பெயர் வகை இ.கிளைப்பெயர் வகை ஈ.இலைப்பெயர் வகை

**II குறுவினா** 1X2=2

3. அ.பலகை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

அல்லது

ஆ. "கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது".
பாடல் அடிகளில் உள்ள மோனை, எதுகைச் சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

**III சிறுவினா.** 1X3=3

4. அ .தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?

அல்லது

ஆ. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது.'
இதுபோல் இளம்பயிர்வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

**IV விடையளி.** 1X5=5

5. அ. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.

அல்லது

ஆ.காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



**V நெடுவினா.** 1X8=8

6, அ.நாட்டு வளமும் சொல் வளமும் தொடர்புடையது என்பதை பாவாணர் வழி நின்று விளக்குக.

அல்லது

ஆ. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன?

**VII அடிபிறழாமல் எழுதுக.** 3

7. தென்னன் மகளே ... எனத் தொடங்கும் மனப்பாடப்பாடலை எழுதுக.

**VIII படிப்போம் பயன்படுத்துவோம்.** 2

8. Consonant

9. Discussion

BLESSING PATHWAY EDUCATION (OPC) PRIVATE LIMITED
BLESSING POWER GUIDE
BLESSING TUITION & TUTORIAL CENTRE
ISO 9001:2015 Certified Institution

## பத்தாம் வகுப்பு தமிழ்

## தமிழ்த்துகள் அலகுத்தேர்வு 3 இயல் 2

மதிப்பெண்கள் 25 | நேரம் 45 நிமிடங்கள்

I பலவுள் தெரிக. 2X1=2

1. அன்பால் கட்டினார் என்பது .................... வேற்றுமைத் தொடர்

அ இரண்டாம் ஆ மூன்றாம் இ நான்காம் ஈ ஐந்தாம்

2. பரிபாடல் அடியில் 'விசும்பில், இசையில்' ஆகிய சொற்கள் குறிப்பவை எவை?

அ.வானத்தையும் பாட்டையும் ஆ.வான்வெளியில், பேரொலியில்

இ.வானத்தில், பூமியையும் ஈ.வானத்தையும் பேரொலியையும்

II குறுவினா. எவையேனும் 2 2X2=4

3. கட்டுரை படித்த – இச்சொற்களுக்கு இடையில் வேற்றுமை உருபைப் பயன்படுத்தித் தொடரை விரித்து எழுதுக.

4. தமிழர்கள் வீசுகின்ற திசையைக் கொண்டு காற்றுக்கு எவ்வாறு பெயர் சூட்டியுள்ளனர்?

5. மென்மையான மேகங்கள் துணிச்சலும் கருணையும் கொண்டு வானில் செய்யும் நிகழ்வுகளை எழுதுக.

III சிறுவினா. 1X3=3

6. அ. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

அல்லது

ஆ. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது.
இவ்வாறு நீர் தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.

IV படிவத்தை நிரப்புக. 1X5=5

7. அ. வீட்டு எண் 70, மருதம் தெரு, முகில் நகர், மதுரை மாவட்டத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த கண்ணனின் மகன் செல்வன் எழுத்தர் பணியில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னைச் செல்வனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள தன் விவரப் படிவத்தை நிரப்புக.

அல்லது

ஆ.மாவட்ட அளவில் நடைபெற்ற *மரம் இயற்கையின் வரம்* எனும் தலைப்பிலான கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.

V நெடுவினா. 1X8=8

8 அ."பிரும்மம்" கதை உணர்த்தும் பிற உயிர்களைத் தம் உயிர் போல் நேசிக்கும் பண்பினை விவரிக்க.

அல்லது

ஆ. காற்று மாசுபாட்டைத் தடுக்கும் வழிமுறைகளை விவரித்து எழுதுக.

VI படிப்போம் பயன்படுத்துவோம். 3

9. Land Breeze

10, Whirlwind

11. Tempest

# பத்தாம் வகுப்பு தமிழ்

மதிப்பெண்கள் 25 | தமிழ்த்துகள் அலகுத்தேர்வு 3 இயல் 3 | நேரம் 45 நிமிடங்கள்

I பலவுள் தெரிக. 2X1=2

1. பொருந்தாததைத் தேர்க.

அ. இன்மொழி ஆ. கொல்களிறு இ. செங்காந்தள் ஈ. வட்டத்தொட்டி.

2. காலில் அணியும் அணிகலனைக் குறிப்பது ________

அ.சுட்டி ஆ.கிண்கிணி இ.குழை ஈ.சூழி

II குறுவினா. எவையேனும் 2 மட்டும் 2X2=4

3. இவ்வுலகம் நமக்கு உரிமை உடையதாக வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியதை எழுதுக.

4. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக

5. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களின் வகையைக் கண்டறிந்து விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.

III சிறுவினா. 1X3=3

6. அ. ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் கூறிய கருத்துகளை வள்ளுவர் வழி நின்று விளக்குக.

அல்லது

ஆ. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

IV நெடுவினா. 1X8=8

7 அ.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

அல்லது

ஆ. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

V அ.கடிதம் எழுதுக. 1X5=5

8. அ. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலைகூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

அல்லது

ஆ.காட்சியைக்கண்டு கவினுற எழுதுக.



தமிழ்த்துகள்

VI படிப்போம் பயன்படுத்துவோம். 3

9. Hospitality

10. Baby shower

தமிழ்த்துகள்

11. House warming

## பத்தாம் வகுப்பு தமிழ்

மதிப்பெண்கள் 25 | **தமிழ்த்துகள் அலகுத்தேர்வு 4 இயல் 4** | நேரம் 45 நிமிடங்கள்

**I பலவுள் தெரிக.** 2X1=2

1. இட வழுவிற்கு ஓர் எடுத்துக்காட்டு ..........................

அ நீ வந்தேன் ஆ நீ வந்தாய் இ நேற்று வந்தான் ஈ செழியன் வந்தது

2. கீழ்க்காண்பனவற்றுள் எந்த இலக்கியம் பிறமொழிப் படைப்பினைத் தழுவித் தமிழில் படைக்கப்பட்டது?

அ.திருக்குறள் ஆ.கம்பராமாயணம் இ.கலித்தொகை ஈ.சிலப்பதிகாரம்

**II குறுவினா** 1X2=2

3. அ. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து எழுதுக

அல்லது

ஆ. அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

**III சிறுவினா.** 1X3=3

4. அ. பலதுறைகளின் வளர்ச்சிக்கு மொழிபெயர்ப்பு எவ்வாறு பயன்படுகிறது?

அல்லது

ஆ. ஏதேனும் இரண்டு வழுவமைதிகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

**IV படிவம்.** 1X5=5

5. அ. விருதுநகர் மாவட்டம், சாத்தூர், எண் 33, அன்பு நகரில் வசித்து வரும் முரளி என்பவர் தன் மகள் இனியாவுடன் மாவட்ட மைய நூலகத்திற்குச் சென்று தன் மகளுக்காக நூலக உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை வாங்குகிறார். தேர்வர் தன்னை இனியாவாகப் பாவித்து கொடுக்கப்பட்ட படிவத்தை நிரப்புக.

அல்லது

**ஆ. மொழிபெயர்க்க.**

Translation is an art in itself. No one can do that. A translator should be neutral and not attached to any language. Specifically, he should be proficient in both the languages i.e. both the language and the source language. They should be familiar with the social and cultural conditions of both the languages.

**V நெடுவினா.** 8X1=8

6.அ. தமிழின் இலக்கிய வளம்– கல்வி மொழி– பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல் கருத்துகள்– பிற துறைக் கருத்துகள்– தமிழுக்குச் செழுமை – மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.

அல்லது

ஆ. மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.

**VI அடிபிறழாமல் எழுதுக.** 3

7. புண்ணியப்... எனத் தொடங்கும் திருவிளையாடற்புராண மனப்பாடப்பாடலை எழுதுக. தமிழ்த்துகள்

**VII படிப்போம் பயன்படுத்துவோம்.** 2

8. Translation

9. Human Resource

தமிழ்த்துகள்